# டிசம்பர் – 08 – வெள்ளி

## அன்னை மரியாவின் அமல உற்பவம்

**ஆண்டவர்தம் மீட்பை அறிவித்தார்: பிற இனத்தார் கண்முன்னே தம் நீதியை வெளிப்படுத்தினார். திபா. 98:2**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 3 : 9 – 15,20

ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு, ”நீ எங்கே இருக்கின்றாய்?” என்று கேட்டார். ”உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால், எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில், நான் ஆடையின்றி இருந்தேன். எனவே, நான் ஒளிந்து கொண்டேன்” என்றான் மனிதன். ”நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக்கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ?” என்று கேட்டார். அப்பொழுது அவன், ”என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் நானும் உண்டேன்” என்றான். ஆண்டவராகிய கடவுள், ”நீ ஏன் இவ்வாறு செய்தாய்?” என்று பெண்ணைக் கேட்க, அதற்குப் பெண், ”பாம்பு என்னை ஏமாற்றியது, நானும் உண்டேன்” என்றாள். ஆண்ட வராகிய கடவுள் பாம்பிடம், ”நீ இவ்வாறு செய்ததால், கால்நடைகள், காட்டுவிலங்குகள் அனைத்திலும் சபிக்கப்பட் டிருப்பாய். உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியைத் தின்பாய். உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்” என்றார். மனிதன் தன் மனைவிக்கு ”ஏவாள்” என்று பெயரிட்டாள் ஏனெனில் உயிருள்ளோர் எல்லோருக்கும் அவளே தாய்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்

## இரண்டாம் வாசகம் : எபேசியர் 1 : 3 - 6

சகோதர சகோதரிகளே! நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றி! அவர் விண்ணகம் சார்ந்த, ஆவிக்குரிய ஆசி அனைத்தையும் கிறிஸ்து வழியாக நம்மீது பொழிந்துள்ளார். நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளை களாக்கிக் கொள்ள அன்பினால் முன்குறித்துவைத்தார். இதுவே அவரது விருப்பம். இதுவே அவரது திருவுளம். இவ்வாறு தம் அன்பார்ந்த மகன் வழியாக நம்மீது ஒப்புயர்வற்ற அருளைப் பொழிந்தருளியதால் அவரது புகழைப் பாடுகிறோம்.

## நற்செய்தி : லூக்கா 1 : 26 - 38

அக்காலத்தில் ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, ”அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார். வானதூதர் அவரைப் பார்த்து, ”மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர். இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது” என்றார். அதற்கு மரியா வானதூதரிடம், ”இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!” என்றார். வானதூதர் அவரிடம், ”தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை” என்றார். பின்னர் மரியா, ”நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

**தியானம்:** உலகத்தை மீட்கும் திட்டம் நம் அன்னை மரியாவழியாக நடக்கிறது. இயேசுவின் பிறப்பு ஒரு மங்கள வார்த்தை. இந்த மங்கள வார்த்தை தரும் செய்தி 1. ஆண்டவரின் இரக்கத்திற்கு முடிவு இல்லை இந்த மங்கள வார்த்தை ஆண்டவரின் மீட்புத்திட்டத்தில் நாமும் பங்கு கொள்ள இறைவன் தரும் அழைப்பு 2. இறைவனின் பிறப்பு செய்தி சீர்குலைகின்ற செயலாகவும், குழப்பம் தரக்கூடியதாகவும் இருக்கும். இயேசுவின் பிறப்பால் ஏரோது குழம்பிப்போனான். ஜெருசலேம் முழுவதும் கலங்கிற்று என்றும் வாசிக்கின்றோம். ஆனாலும் குழப்பத்தின் மத்தியிலும் இது விசுவாசத்திற்கான அழைப்பே. 3.இந்த இறைவனின் மீட்பின் திட்டத்தில் அவர் தரும் அழைப்பை ஏற்றுக்கொள்ளுவதும் நம்புவதும் சாத்தியமற்றது என்று தோன்றலாம். ஆனாலும் இந்த அழைப்பே இறைவனிடம் சரண் அடைய நம்மைத் தூண்டுகிறது. இந்த சாத்தியமற்ற நிலையே நம்மை ஆண்டவரே .”இதோ உமது அடிமை என்று சொல்லத்தூண்டுகிறது. இறுதியாக ,நம்பிக்கை சாத்தியமாகிறது.. விசுவாசம் சாத்தியமாகிறது. மரியாவின் நம்பிக்கையும் விசுவாசமும் நற்பலனைத்தருகிறது.